**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
கேகாலை கல்வி வலயம்
வாராந்தப் பாடசாலை - மூன்றாம் தவணை

**வாரம் - 1** **தரம் - 11**

## தமிழ் மொழி - TAMIL

1. கிருட்டினன் தூது என்ற பாடப்பரப்பில் இடம்பெறும் பின்வரும் செய்யுட் பகுதிகளை படித்து அதன் கீழ் வினவப்படுகின்ற வினாக்களுக்கு விடை தருக.

1) வயிரம் எனும் சுடு நெருப்பை மிக மூட்டி
வளர்க்கின் உயர் வரைக்காடு என்ன
செயிர் அமரில் வெகுளி பொர சேர இரு
திறத்தேமும் சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்து வாழ
உயிர் அனையாய சந்துபட உரைத்தருள் என்றா
அறத்தின் உருவம் போல்வான்.

i) இங்கு இடம்பெறும் அணியை இனங்கண்டு விளக்குக.

ii) குருநாட்டின் சிறப்பு எவ்வாறு பேசப்படுகின்றது?

2) குரவரையும் கிளைஞரையும் குலத்து உரிய
துணைவரையும் கொன்று போர் வென்று
அரவ நெடுங்கடல் ஆடை அவனி எலாம்
தனி ஆளும் அரசு தன்னில்
கரவு உறையும் மனத் தாதை முனிக்கு உரைத்த
மொழிப்படியே கானம் தோறும்
இரவு பகல் பல மூல சாகம் நுகர்ந்து
உயிர் வாழ்தல் இனிது நன்றே.

i) குரவு உறையும் மனத்தாதை, முனி என குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

ii) பலமூல சாகம் எனப்படுவது யாது?

## இஸ்லாம் - ISLAM

(இவற்றிற்குரிய விடைகள் பக்கம் 108 -112 வரை உள்ளன)

1. சிறு வயதில் இஸ்லாத்தை ஏற்ற நபித்தோழர் யார்? (1 புள்ளி)
2. கலீபா அலி (றழி) அவர்களை நபியவர்கள் எச்சிறப்புப் பெயரால் புகழ்ந்துரைத்துள்ளார்கள்? (1 புள்ளி)
3. கலீபா அலி (றழி) அவர்கள் மூன்றாம் கலீபாவின் காலத்தில் எப்பதவியை வகித்தார்கள்? (1 புள்ளி)
4. நான்காம் கலீபாவின் ஆட்சித் தலைநகரம் யாது? (1 புள்ளி)
5. அலி (றழி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற முக்கிய சீர்திருத்தங்கள் யாவை? (6 புள்ளிகள்)

**சைவநெறி - SAIVANERY**

“ சைவ சமயத்தில் ஆன்ம விடுதலைக்குரிய செயற்பாடுகளின் பயிற்சிகளாக சைவ சாதனைகள் விளங்குகின்றன”.

1. தீட்சை என்றால் என்ன?

2. தீட்சைகள் எத்தனை வகைப்படும்? அவை எவை? அவற்றை விளக்குக.

**புவியியல் - GEOGRAPHY**

**இலங்கையின் இயற்கை இடர்கள் என்ற பாடத்தை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இலங்கையில் அதிகளவு இயற்கை இடர்கள் ஏற்படுவதற்கான காரணங்களை குறிப்பிடுக.

2. இலங்கை நாடானது அனுபவிக்கின்ற இயற்கை இடர்கள் யாவை?

3. நிலச் சரிவு என்றால் என்ன?

4. நிலச்சரிவு அனர்த்தம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் இயற்கை, மானிட காரணிகளை அட்டவணைப்படுத்துக.

5.இலங்கை அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தினால் பெயரிடப்பட்டுள்ள நிலச்சரிவு ஏற்படக் கூடிய மாவட்டங்களை இலங்கை புறவுருவப் படமொன்றில் குறித்துப் பெயரிடுக.

**வரலாறு - HISTORY**

**உலகில் ஏற்பட்ட புரட்சிகள்**

அமெரிக்க சுதந்திரப் போர் தொடர்பான விடயங்களை நன்கு வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வட, தென் அமெரிக்க நாடுகளில் ஐரோப்பிய குடியேற்றங்கள் அமைப்பதில் தாக்கம் செலுத்திய காரணிகளைத் தருக.

2. அமெரிக்காவில் குடியேற்றங்கள் அமைப்பதில் முன்னோடியாக நடவடிக்கைகள் மேற்கொண்ட நாடுகளை தருக.

3. அமெரிக்க சுதந்திரப் போருக்கான காரணங்களைக் குறிப்பிட்டு அதில் மூன்றை விளக்குக.

4. உலக படமொன்றில் பிரித்தானியா அமெரிக்காவில் நிறுவப்பட்ட குடியேற்றங்களை குறித்துப் பெயரிடுக.

**விஞ்ஞானம் - SCIENCE**

**இலத்திரனியல்**

**(விஞ்ஞானம் பகுதி - 11 புத்தகத்தில் பக்கம் 55 முதல் 59 வரை)**

1. கீழ் வருவனவற்றை விளக்கி உதாரணங்களைத் தருக.
   - ❖ மின் கடத்திகள்
   - ❖ மின் காவிகள்
   - ❖ மின் குறை கடத்திகள்
2. மின் குறை கடத்திகளின் இரு வகைகளும் எவை?
3. உள்ளீட்டுக் குறை கடத்திகள் எனப்படுவது யாது?
4. எக் கூட்ட மூலகங்களை கலப்படம் செய்வதனால் p வகை n வகை குறை கடத்திகள் உருவாகும்
5. p, n வகை குறை கடத்திகளை வரைந்து காட்டுக.
6. p - n சந்தியை வரைந்து பெயரிட்டு, அச்சந்தி எவ்வாறு உருவாகின்றது என விளக்குக.